# கச்சதீவு: இந்திய ஆட்சேபத்தை இலங்கை நிராகரித்தது

Registered as a Newspaper in Ceylon

★✱ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10

தபால்பெட்டி எண்: 49

இதழ் 242

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

கீலக வருடம் புரட்டாதி 24 றஜப் 17 வியாழக்கிழமை (10-10-68)

கொழும்பு, புதன்

கச்சதீவுக்கு மேலாக இலங்கை விமானம் பறந்து சென்றதை ஆட்சேபித்து இலங்கையிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனர் இலங்கை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்குத் தெரிவித்திருந்த ஆட்சேபத்தை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு நிராகரித்துவிட்டது.

இலங்கையில் திருக்குர்ஆன் 1400வது ஆண்டுவிழாவில் கலந்துகொள்ள வந்திருந்த பாகிஸ்தான் சட்ட மந்திரி இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னதாக மந்திரிசபை திருப்பர்க்க மகாநாட்டின் சேவையின் யாழ்ப்பாணத்துக்கு தாம் விமானத்தில் சென்றபோது கச்சதீவுக்கு மேலாக தாழப்பறந்து சென்றதாகவும் கச்சதீவு பூகோள ரீதியாகவும் சட்டரீதியாகவும் இலங்கைக்கே சொந்தமென்றும் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்தே இலங்கையிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனர் இலங்கை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கு ஆட்சேபக்குறிப்பொன்றை அனுப்பியிருந்தார். இந்த ஆட்சேபத்தை அது முற்றாக நிராகரித்தது.

### கன்னங்கராவுக்கு பிறகு வந்த கல்வி மந்திரிகளில்

# "இரியகொல்லைக்குத்தான் மக்களின் பெருமாதரவு"

## பிரதம மந்திரி புகழ்கிறார்

### இன்று நம்பிக்கையில்லா தீர்மானம் வருகிறது

கொழும்பு, புதன்

"இலவசக்கல்வியை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய திரு. சி. டபிள்யு. கன்னங்கராவுக்குப் பிறகு சாதாரணமக்களின் பெருமாதரவைப் பெற்றிருப்பவர் இன்றைய கல்வி மந்திரியான ஐ. எம். ஆர். ஏ. திரு. இரியகொல்லைதான்."

இப்படி பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா அரசாங்கக் கட்சியின் ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் கூறினார்.

மேற்கத்திய கலாசாரத்திலும் கல்வியிலும் நடுபாடு கொண்டவர்கள் திரு. இரியகொல்லையை ஒரு 'கமயா' [கிராமத்தான்] என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர் தான் சாதாரண மக்களின் அபிலாஷைகளை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார். நாட்டின் கல்வி சாரங்களுக்கான சீர்திருத்தங்களை செய்யப்போகும்போது மேற்கத்திய மோகம் கொண்ட செல்வாக்குள்ள ஒருசிலர் அவரை எதிர்க்கிறார்கள் என்று பிரதம மந்திரி விளக்கினார்.

நானும் மேற்கத்திய கல்விதான் கற்றேன், ஆனால் அரசியல் காரணமாக பொது மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதால் அவர்களின் குறைபாடுகள் எனக்கும் நன்கு தெரியும் என்றார் பிரதமர்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தேசிய மொழிகளுக்கு உரிய இடம் கொடுத்த போது எழுந்த எதிர்ப்புகளைப் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## படுக்கை அறையில் இறந்து கிடந்தார்

### சட்டசபை உறுப்பினர்

சென்னை, ஒக். 9

தமிழ்நாடு சட்டசபையில் சம்யுக்த சோஷலிஸ்க் கட்சி அங்கத்தவரான திரு எஸ். பாலசுப்பிரமணியம் தமது படுக்கை அறையில் இறந்து கிடக்க இன்று காணப்பட்டார்.

கோயம்புத்தூர் நகரிலுள்ள ஒரு தொகுதியின் பிரதிநிதியான திரு. பாலசுப்பிரமணியத்துக்கு வயது 40. இவர் கடந்த திங்கட்கிழமை தமக்கு உடல் நிலை நன்றாய் இல்லை என்று கூறிக்கொண்டே தமது அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்டு படுத்ததாகவும் அவரைப் பார்க்க வந்த உறவினர் ஒருவர் நேற்றும் இன்றும் கதவைத் தட்டிப் பார்த்துவிட்டு பொலிசுக்கு அறிவித்ததாகவும் பொலிசார் வந்து பார்த்தபோது அவர் படுக்கையில் இறந்து கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கை மரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெறுமதியான ஜவுளிகள் ஆசிரியர் வீட்டில் இருந்தன

யாழ்ப்பாணம், வியாழன்

கள்ளக்கடத்தல் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜவுளிகளை யாழ்ப்பாண நகரிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்றுமாலை பொலிசார் கைப்பற்றினர்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் வெறகொட தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரே இந்த ஜவுளிகளைக் கண்டுபிடித்தனர். இங்குள்ள சிவப்பிரகாசம் வீதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டிலிருந்தே இவைகள் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

கைப்பற்றப்பட்ட ஜவுளிகளில் 8 கூறைச் சேலைகள் உட்பட 185 உயர்ரகசேலைகளும், இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதாகக் கருதப்படும் சுடுவேட்டிகளும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டனவென்றும் அவை சுங்க இலாகாவினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீபாவளித்தினத்தை முன்னிட்டு இங்கு கடத்தல்ஜவுளிகள் அதிகமாக வந்திருக்கலாம் என்ற நம்பிக்கையில் பொலிசார் இவைகளைக் கண்டுபிடிப்பதில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளனர். [கா. நி.]

## மேலும் இரு வீடுகளில் விலையுயர்ந்த ஜவுளிகள்

நல்லூர், புதன்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஒரு வீட்டில் 7,000 ரூபா பெறுமதியான பட்டு வேட்டிகளும் சால்வையும் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக வீட்டுச் சொந்தக்காரர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொட்டடியிலும் ஒரு வீட்டில் 5000 ரூபாய் பெறுமதியான விலையுயர்ந்த சாறிகள் கைப்பற்றப்பட்டன.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராஜேஸ்வரன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இவ்விரு வீட்டையும் திடீர் சோதனை செய்து இவைகளைக் கண்டுபிடித்தது. இவர்கள் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டனர்.

## தீபாவளிக்காக முன் கூட்டி சம்பளம்

கொழும்பு, புதன்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களின் இம்மாதச் சம்பளம் இம்மாதம் 18ந் திகதி கிடைக்கும்.

நிறைசேரி உதவிக்காரியதரிசி திரு. பி. டி. உடுவலவிடுத்துள்ள ஒரு சுற்றறிக்கையில் கேவலிக செலவுஏற்படமாட்டாதெனில் அரசாங்க ஊழியர்களுக்கு, தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு இம்மாத சம்பளத்தை இம் மாதம் 18ந் திகதி வழங்கலாம் எனத் தெரிவித்திருக்கிறார்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கு இம்மாத சம்பளத்தை சிறிது முன்னராகவே வழங்கவேண்டுமென்று தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணப் பிரதிநிதியுமான திரு ஜி. ஜி. பொன்னம்பலம், நிதியமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்காவைக் கேட்டிருந்தார்.

## துப்பாக்கியுடன் வீதியில் சென்றவர் கைது

காங்கேசன்துறை, புதன்

உத்தரவு பத்திரம் பெறப்படாத துப்பாக்கி ஒன்றை பிரதான வீதியால் கொண்டு சென்றதாக ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

மயிலிட்டியைச் சேர்ந்த இலகராசா என்பவரை காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி திரு. ஹாத் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி மயிலிட்டி பிரதான வீதியில் கைது செய்து பாதுகாப்பில் வைத்துள்ளது.

## ரூ. 2,000 திருட்டு

உடுவில், புதன்

சுமார் 2000 ரூபா ரொக்கமும், மூன்று பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலியும் பட்டப் பகலில் மானிப்பாயில் களவாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மானிப்பாயிலுள்ள அந்தோனியார் கோவிலில் பணிவிடை செய்து வாழும் திரேசம்மா என்னும் பெண்மணியே திருட்டுக் கொடுத்தவராவர்.

மல்லுரைச் சேர்ந்த திரேசம்மா வீட்டில் இல்லாத சமயம் பார்த்து மேற்படி பணமும், சங்கிலியும் திருட்டுப் போயிருக்கிறது.

## இன்று

ஸ்ரீமத் சுவாமி திலக்மகாராஜ் இன்று தொடக்கம் இம்மாதம் 13-ம் திகதி வரை தினமும் மாலை 6 மணிக்கு யாழ் நகர மண்டபத்தில் 'மறுபிறப்பு' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவில் பரபரப்பு

# பின்லாந்துக்கு ரஷ்யப் பிரதமர் திடீர் விஜயம்

## இராணுவ உத்தியோகத்தர்கள் அடங்கிய செக். தூதுகோஷ்டி

### மாஸ்கோ சென்றுள்ளது

மாஸ்கோ, ஒக். 9

இராணுவ உத்தியோகத்தர்கள் அடங்கிய செக்கோஸ்லவாக்கியத் தூதுகோஷ்டியொன்று மாஸ்கோ வந்து சேர்ந்துள்ளது. இந்த விஜயம் பற்றி உத்தியோகபூர்வமான முன்னறிவித்தல் எதுவும் அளிக்கப்படவில்லை.

செக்கோஸ்லவாக்கியாவில் வார்ஸோத் துருப்புகள் தங்கியிருக்கும் நிலைமைச் சட்டரீதியாக அங்கீகரிக்கும் முகமாகவே இத்தூதுகோஷ்டி மாஸ்கோ வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், பிராக்கில் கூடிய செக் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்சபை, அண்மையில் ரஷ்யத் தலைவர்களுடன் மாஸ்கோவில் திரு. டூப்செக் தலைமையிலான செக். தூதுகோஷ்டி நடத்திய பேச்சுகளின் முடிவுகளை அங்கீகரித்துள்ளது.

## ரஷ்ய-மே.ஜெர்மன் வெளியுறவு மந்திரிகள்

### ஆறு வருடங்களுக்குப்பின் சந்திப்பு

ஹெல்ஸிங்கி, ஒக். 9

ரஷ்யப்பிரதமர் திரு. கோஸிஜின், நேற்றுப் பின்லாந்துக்குத் திடீர் விஜயம் செய்துள்ளார்.

அவர், பின்லாந்துக்குடாவில், சோவியத் கப்பலொன்றில் வைத்து, பின்லாந்து அதிபருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இச்சந்திப்பு, பின்லாந்து அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெறுவதாகப் பின்லாந்தில் தெரிவிக்கப்பட்டது.

இன்று, ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜின், பின்லாந்துத் தலைநகரான ஹெல்ஸிங்கி செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இப்படியிருக்க, பின்லாந்தின் மீது மேற்கு ஜெர்மனி வைத்துள்ள ஆக்கிரமிப்பு நோக்கங்களையிட்டுப் பின்லாந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென ரஷ்ய பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

ரஷ்ய பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' செக்கோஸ்லவாக்கியாவில் ரஷ்யத் துருப்புகள் சென்றுள்ளது சம்பந்தமாகப் பின்லாந்தில் பிரதான அரசியல் கட்சியான ஜனநாயகக்கட்சி, ரஷ்ய எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதைக் கண்டித்துள்ளது.

நியூயோர்க், ஒக். 9

ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. அன்ட்ரி குரோமிக்கோ, மேற்கு ஜெர்மன் வெளியுறவு மந்திரி திரு. வில்லி பிராண்டை நேற்று இங்கு சந்தித்துப் பேசினார்.

இரு நாட்டு வெளியுறவு மந்திரிகளுக்குமிடையே, ஆறு ஆண்டுகளுக்குப்பிறகு நடைபெறும் முதற் சந்திப்பு இதுவேயாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, மேற்கு ஜெர்மன் வெளியுறவு மந்திரி திரு. பிரண்ட், நேற்று, 24 மணி நேரத்தில், இரண்டாவது தடவையாக அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க்கைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோ, ருமேனிய, இத்தாலிய வெளியுறவு மந்திரிகளையும் சந்தித்துப் பேசினார்.

## மே. வங்காள நிலச்சரிவுகளில் மாண்டோர் தொகை 652

கல்கத்தா, ஒக். 9

மேற்கு வங்காளத்தில், வெள்ளத்திலும், நிலச்சரிவுகளிலும் இறந்தோர் தொகை இப்போது 652 ஆக உயர்ந்திருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், டார்ஜிலிங்கில் மட்டும் 612 பேர் இறந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள பகுதியில், மீட்பு, நிவாரண வேலைகள் போர்க்கால அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வேலைகளில் இராணுவ எல்லைப் படைகள் பெரிதும் ஈடுபட்டுள்ளன.

சில இடங்களில் விமான மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன.

மேற்கு வங்காள-அஸ்ஸாம் எல்லையில், கோல்பாரா பகுதியில், வெள்ளப்பெருக்கில் 9 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது அப்பகுதியில் வெள்ளம் தணிந்து வருவதாகக் கூறப்படுகிறது.

வடகிழக்கு ரயில்வே, பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள குறிப்பொன்றில், அஸ்ஸாம் சேவையிலுள்ள ரயில்களை ஓட இன்னும் சில வாரங்கள் பிடிக்குமென்று அறிவித்துள்ளது. பாதைகளில் ஏற்பட்டுள்ள உடைப்புகள், பாலங்களில் உண்டாகியிருக்கும் சேதங்கள் ஆகியன சீரமைப்பு வேலைகளை அவசியமாக்கி இருப்பதாகவும், இவ்வேலைகளைச் செய்து முடிக்கச் சில வாரங்களாவது ஆகுமெனவும் அக்குறிப்புத் தெரிவித்துள்ளது.

ஆனாலும், ரயில்களை மீண்டும் ஓடவிடுவதற்கான சகல முயற்சிகளையும் வடகிழக்கு ரயில்வே இலாகா எடுத்துவருவதாக அக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## சிக்கிமில் 100 பேருக்கு அதிகமானோர் மரணம்

ஷில்லொங், ஒக். 9

சிக்கிமில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட வெள்ள நிலச்சரிவுகளில் இறந்தோர், காயப்பட்டோர், காணாமற் போனவர்கள் தொகை 100க்குமதிகமாக இருப்பதாக இப்போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடிபாடுகளிலிருந்து ஆட்களை மீட்கும் வேலைகளில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர், சிக்கிம் இராணுவத்தினருக்கு உதவியளித்துவருகின்றனர்.

இடிபாடு மீட்பு வேலைகள் முடிவுற்றதும், இறந்தோர் தொகை இன்னும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

## மேற்கு ஆசிய அமைதிக்கு இஸ்ரேலின் 9-அம்சத்திட்டம்

### வெளியுறவு மந்திரி எபான் சமர்ப்பித்தார்

நியூயோர்க், ஒக். 9

மேற்கு ஆசியப் பிரச்னையைத் தீர்க்கவும், அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டவும் இஸ்ரேல் ஒன்பது அம்சத் திட்டமொன்றை ஐ.நா.வில் சமர்ப்பித்துள்ளது.

இந்த ஒன்பது அம்சத் திட்டத்தைச் சமர்ப்பித்த இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. அபா எபான், மேற்கு ஆசியாவில் நிரந்தரமாக அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் அமைக்கப்படுமானால், தன் வசமுள்ள அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் தனது துருப்புகளை விலக்கிக்கொள்ளுமென உறுதியளித்தார்.

மேற்கு ஆசியாவில் ஐ.நா. விசேட பிரதிநிதியான டாக்டர் குன்னர் ஜாரிங்கின் சமாதானப் பணிக்கு இஸ்ரேல் தன்னாலான உதவியை அளிக்க விருப்பம் கொண்டுள்ளதாகவும் திரு. எபான் குறிப்பிட்டுள்ளார்.

மற்றும், மேற்கு ஆசியப் பகுதியில் நடமாட்ட சுதந்திரம், ஜெருசலத்துக்குப் போய்வரும் உரிமை, அகதிப் பிரச்னை, நீர்வழி சுதந்திரம் பற்றி முடிவெடுக்க மாநாடு நடத்துவது பற்றிய ஆலோசனை ஆகிய விஷயங்களும் இஸ்ரேல் வெளியுறவு மந்திரியின் ஒன்பது அம்சத் திட்டத்தில் அடங்கியுள்ளன.

இதற்கிடையில் ஐ.நா.வில் இந்திய தூதுகோஷ்டிக்குத் தலைமைதாங்கும் இந்திய ராஜ்ய வெளியுறவு மந்திரி திரு. பகத், நேற்று ஐக்கிய அரபுக் குடியரசு வெளியுறவு மந்திரி திரு. முகம்மது ரியாட்டைச் சந்தித்துப் பேசினார். இரு மந்திரிகளும் மேற்கு ஆசியப் பிரச்னை பற்றி விவாதித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

## இந்தியப் பிரதமர் இந்திராவுக்கு கொலம்பியாவில் உற்சாகமான வரவேற்பு

### 'பொருளாதாரச் சுதந்திரமின்றி அரசியல் சுதந்திரத்தில் அர்த்தமில்லை'

புகோட்டா, ஒக். 9

சிலிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்றுக் கொலம்பிய நாட்டின் குடியரசின் தலைநகரான புகோட்டா வந்து சேர்ந்தபோது அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருமதி இந்திராகாந்தியை வரவேற்கக் கொலம்பியா அதிபர், மந்திரிகள், ராஜீய பிரதிநிதிகள், பொகோட்டா மேயர் மற்றும் பிரமுகர்களும் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.

**அதிபர் வரவேற்பு**

இந்தியப் பிரதமரை வரவேற்றுப் பேசிய கொலம்பியா அதிபர் உலகில் அளவில்லாச் செல்வாக்குப் பெற்ற ஒரு நாட்டின் பிரதிநிதியை வரவேற்பதில் கொலம்பியா பெருமைப்படுவதாகக் கூறினார்.

பொருளாதார சுதந்திரம், சமூக நீதி ஆகியவற்றுக்காக இந்தியா உழைத்து வருவது போலவே கொலம்பியாவும் அப்பிரச்னைகளைத் தீர்க்கமுற்பட்டு வருவதாகக் கொலம்பியா அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

**இந்திரா நன்றியுரை**

இந்தியாவுக்கும் கொலம்பியாவிற்குமிடையே நெருங்கிய பிணைப்பு இருப்பதாகத் திருமதி இந்திரா காந்தி கொலம்பியா அதிபரின் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுதந்திரம், சமாதானம், நலச்செழிப்பு ஆகியன பிரிக்க முடியாதவை என்று கூறிய இந்தியப் பிரதமர் இந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடும் நாடுகள் யாவுடனும் இந்தியாவுக்குப் பொதுவான இலட்சியப் பிணைப்பு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விமான நிலையத்திலிருந்து கொலம்பியா அதிபருடன் புறப்படுமுன்னர் திருமதி இந்திராகாந்திக்கு 2,000 இராணுவத்தினர் அளித்த மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட்டார். 21 பீரங்கிகள் மரியாதைக் குண்டுகளை வெடித்தன.

பின்னர் பொகோட்டாவில் இந்தியப் பிரதமர் கொலம்பியாவின் பிரதான மாதர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார்.

**சட்டசபைகளில் பேச்சு**

அதற்குப்பின் அவர் கொலம்பியாவின் ஜனப்பிரதிநிதிகள் சபை, செனேட் சபை ஆகிய இரண்டு சபைகளிலும் தனித்தனியே உரையாற்றினார்.

செனேட் சபையில் திருமதி இந்திராகாந்தி பேசுகையில் கொலம்பியாவின் ஜனநாயக அரசியல் அமைப்புக்கும் பாராட்டு தெரிவித்தார். இந்தியாவும் பல கஷ்டங்களுக்கிடையேயும், ஜனநாயக அரசியல் முறையை உறுதியாகப் பின்பற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றி அவர் குறிப்பிடுகையில் எல்லா நாடுகளுடனும் சமாதானத்துடனும், நட்புறவுடனும் வாழ்வதே இந்தியாவின் இலட்சியமாகும் என்று தெரிவித்தார்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் அவர் பேசுகையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை எதிர் நோக்கும் சவால்கள் பற்றிக் குறிப்பிட்டார்.

இந்த நாடுகளில் அரசியல் சுதந்திரத்துடன் சமூக நீதிக்கும் வசதி செய்து பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டால் அந்த அரசியல் சுதந்திரத்தில் அர்த்தம் இல்லை என்று இந்தியப் பிரதமர் கூறினார்.

இருசபைகளிலும் இந்தியப் பிரதமரின் பேச்சின் முடிவில் அங்கத்தவர்கள் அர[illegible]

## ரொடீஷியப் பிரதமருடன் பேச வில்ஸன் ஜிப்ரால்டர் வந்தார்

### தத்தம் கொள்கை நிலைகளை இருவரும் வலியுறுத்தினர்

லண்டன், ஒக். 9

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன், ரொடீஷியப் பிரதமர் திரு. அயன் ஸ்மித்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துமுகமாக, இன்று ஜிப்ரால்டர் போய்ச் சேர்ந்துள்ளார்.

ஜிப்ரால்டர் குடாவில், பிரிட்டிஷ் போர்க்கப்பல் ஒன்றில் இரு பிரதமர்களும் ரொடீஷியப் பிரச்னையை விவாதிக்கவிருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகள் மூன்று அல்லது நான்கு நாட்கள் நீடிக்குமென்றும், அதுவரை ஜிப்ரால்டர் வந்து சேர்ந்துள்ள பிரிட்டிஷ் போர்க்கப்பல் அங்கேயே தரித்திருக்குமென்றும் தெரிகிறது.

முன்னதாக லண்டனை விட்டு ஜிப்ரால்டர் புறப்பட முன்னர், ரொடீஷியப் பிரச்னைக்கான எந்தத் தீர்வும், பிரிட்டனின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறாக அமைவதற்குத் தாம் இடமளிக்கப் போவதில்லையென்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸன் குறிப்பிட்டார்.

ரொடீஷியப் பிரதமர் திரு. அயன் ஸ்மித், ஜிப்ரால்டருக்குப் புறப்பட முன்னர், நாட்டுக்கு ஒலிபரப்பிய செய்தியொன்றில், பிரிட்டனுடன் ஒரு சமரச முடிவுக்கு வருவதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமென்று கூறினார். ஆனால் அதே நேரத்தில், ரொடீஷியா, தனது அடிப்படைக் கொள்கைகளை விட்டுக்கொடுக்காதென்றும் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளின் முடிவில், இருநாட்டுத் தூதுகோஷ்டிகளும் தத்தம் நாடுகளுக்குத் திரும்புமென்றும், அங்கு தத்தமது அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னரே இறுதி முடிவுகள் அறிவிக்கப்படுமென்றும் திரு. ஸ்மித் மேலும் குறிப்பிட்டார்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

செயலின்றி மந்தமாயிருக்கும் நிலையைப் போக்கிக்கொள்ள வேண்டும்; நம்மிடமுள்ள நம்பிக்கையற்ற நிலையையும் நாம் உதறித்தள்ள வேண்டும். இவற்றைச் செய்துவிட்டால், செயல் திறமை தானாகவே உண்டாகும்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு

Ceylon's National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49, Jaffna
Telephone 389

உ ஈழத்தமிழ் வியாழக்கிழமை புரட்டாசி மாதம் 24-ந் திகதி [illegible] (10-10-68)

## தமிழரின் பல்கலை கழகப்படிப்பு

கொழும்பு பல்கலைக்கழகத்திலுள்ள இரண்டாவது வருட தமிழ்பட்டதாரி வகுப்பிலுள்ள மாணவர்கள் தங்கள் பட்டப் படிப்பை முடித்துக்கொள்வதற்கு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடமளிக்கப்பட மாட்டாதென்று பேராதனைப் பல்கலைக்கழக கல்விப் பீடம் செய்திருக்கும் முடிவை அறிந்து தமிழ் பட்டதாரி மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் மட்டுமல்லாது இந்நாட்டின் எதிர்கால சந்ததியின்— குறிப்பாக எதிர்காலத் தமிழ்ச்சமுதாயத்தின் நிலையை நினைத்து எவரும் வேதனைப்படாமலிருக்க முடியாது.

பெரும்பாலும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்மூலக்கல்வி கற்ற மாணவர்கள், பல்கலைக்கழகப் பட்டப் படிப்புப் பெறுவதில் சென்ற சில வருடங்களாக அனுபவித்துவரும் கஷ்ட நஷ்டங்கள் சொல்லுந்தரமன்று. இதுபற்றி நாம் இப்பகுதியில் பல தடவைகளிலும் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். தமிழ்மொழிமூலம் கல்வி கற்ற மாணவர்களுக்கு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடவசதி கிடைக்காமல் வெளியில் தனியார் இடங்களில் தங்கியிருப்பதால் அதிகச் செலவும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்படுவதுடன் படிப்பதற்கேற்ற சூழ்நிலையிலும் தங்கியிருக்க நேர்ந்துள்ளது. கொழும்பு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதும் தங்களுடைய நம்பிக்கை நிறைவேறுமென்றும் விடிவுகாலம் ஏற்படுமென்றும் தமிழர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் கொழும்புப் பல்கலைக்கழகம் பெரும்பாலும் கட்டாசிப் பல்கலைக்கழகமாக இருக்கிறதேயன்றி பல்கலைக் கழகத்துக்கு வேண்டிய கட்டட வசதிகளோ, இராவசதிகளோ இல்லை. குறைப்பந்தவல் கட்டடத்தில் விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும், நிழற்றும் விரிவுரைகளும்போதனைகளும் அரைகுறையாக இருப்பதால் கல்வியின் தரத்தையே குறைத்திருக்கின்றன' கொழும்புப்பல்கலைக்கழகத்தமிழ் மாணவர்களின் தொகையைக்குறைத்தென்று பேராதனைக் கல்விப்பீடம் செய்திருக்கும் முடிவு இதை உறுதிப்படுத்துகிறது. இது நாட்டின் எதிர்கால சந்ததியின் நல்வாழ்வில் அக்கறையுடைய அனைவருக்கும் கவலையளிப்பதாகும்.

இலங்கையின் பாடசாலைத் தலைமையாசிரியர்கள், கல்லூரி அதிபர்கள், தமிழ் மாணவர்களின் பெற்றோர்கள், மக்கள் பிரதிநிதிகள் அதிக கவனம் செலுத்தி இப்பிரச்சினைக்குத் தகுந்த தீர்வு காண்பதற்கு முயற்சி செய்ய முன்வரவேண்டும்.

எதிர்காலச் சந்ததியை, நாட்டின் நற்பிரஜைகளாக உருவாகவேண்டிய மாணவர் சமுதாயத்தை சீரழியவிட முடியாது; விடக்கூடாது. இந்நிலையில் தமிழ் மக்களுக்கென ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் மிக அவசரமும் அவசியமும் என்பதை உணர்ந்துகொண்டு அதற்காக முயற்சி செய்யவேண்டும். யாழ்ப்பாணப் பகுதியிலிருந்தே பெரும்பான்மையான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புப் படிக்கச் செல்கின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென்று 1922-ம் ஆண்டிலேயே சுவாமி விபுலானந்தர் வேண்டுகோள் விடுத்திருந்தார். பல்கலைக்கழகம் பற்றி விசாரணை செய்த குழுவின் தலைவரான திரு. நீடாமும் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டுமெனச் சிபார்சு செய்திருந்தார். இவை தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் அவசியமென்பதையே வலியுறுத்துகிறது. கொழும்பிலும், பேராதனையிலும் உயர்கல்வி-பட்டப்படிப்புப் பெற முடியாதிருக்கும் தமிழ் மாணவர்களுக்குப் பட்டப்படிப்புப் பெறுவதற்கு ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதில் தமிழ்ப் பிரதிநிதிகள் இனியும் தாமதிக்காது ஒரு நல்ல முடிவுக்கு வந்து தீவிர முயற்சி செய்யவேண்டும்.

# “8,000 பட்டதாரிகள் பற்றி அரசாங்கத்திற்கு அக்கறையில்லை”

## கேகாலை எம். பி. கலுகல்லே பேச்சு

மொறட்டுவை, புதன்

“இந்நாட்டில் 8,000 பட்டதாரிகள் தற்பொழுது வேலையில்லாமலிருக்கின்றார்கள். அடுத்தவருடம் இவர்களின் தொகை 12,000 ஆக அதிகரிக்கும். இவர்களின் பிரச்சினையைத்தீர்க்க தேசிய அரசாங்கம் எந்தவித அக்கறையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மொறட்டுவை கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் கேகாலை எம். பி. திரு. பி.பி ஜி. கலுகல்லே மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கலுகல்லே மேலும் கூறியதாவது:- டாக்டர்களாகவும், இஞ்ஜினியர்களாகவும், வெளிவரும் நூற்றுக்கணக்கானவர்களுக்கும் கூட இந்த அரசாங்கம், எந்தவிதவேலைவாய்ப்பு உறுதியும் அளிக்கவில்லை.

சுதந்திரக்கட்சி ஆட்சியின் போது 84 000 எஸ். எஸ். சி சித்திபெற்ற வாலிபர்களில் 10,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. 1965-ம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக்கட்சி தோற்கடிக்கப்படாமலிருந்திருந்தால், மிகுதி 74,000 வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கும்.

கடந்த பொதுத்தேர்தலில் சுதந்திரக்கட்சியை ஆதரித்தார்கள் என்ற ஒரே காரணத்தால் இந்த அரசாங்கம், சிங்கள ஜாதிகளுக்கு சம்பந்தமான சேர்ந்த 150 ஆசிரியர்களைப்பழிவாங்கியது. சுதந்திரக்கட்சி மீண்டும் ஆட்சிக்குவரும்போது வேலையிழந்த ஆசிரியர்களுக்கு திரும்பவும் வேலை கொடுக்கும்.

இந்த அரசாங்கம் தற்பொழுது மீண்டும் ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுப்பதன் மூலம், லட்சக்கணக்கான மாணவர்கள் வீதிகளில் அலையவேண்டிய நிலைமை ஏற்படும். காலஞ்சென்ற பிரதமர் சிங்களத்தைமட்டும் உத்தியோக மொழியாக்கியதன் மூலம், சாதாரண மக்களின் பிள்ளைகள் கூட இன்று பல்கலைக் கழகத்திற்கு செல்ல முடிகிறது.

# சுகாதார ஊழியர் வேலைநிறுத்த முயற்சி

காலி, புதன்

‘சுகாதார ஊழியர் ஐக்கிய முன்னணியினர் சுகாதார இலாகா அதிகாரிகளுக்கும் நிரந்தரக் காரியதரிசிக்கும் சமர்ப்பித்த 4 கோரிக்கைகள் சம்பந்தமாக நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றுள்ளது எனவே இந்த முன்னணியின் அங்கத்தவர்கள் வேலைநிறுத்தம் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது’ என மேற்படி முன்னணியின் உப தலைவர் திரு. ஹேர்பட் டி' சில்வா தெரிவித்துள்ளார்.

காலியில் திரு. கே. டபிள்யு ஜயசிங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே திரு. சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

முன்னணியின் இணைக்காரியதரிசி திரு. டபிள்யு. ஆர். பெரேரா பேசுகையில் சகல அரசாங்க இடமாற்றங்களையும் வாபஸ் பெறுமாறு கேட்டுக்கொண்டார். மேலதிக நேர வேலைக்கான சம்பளம் வழங்கப்படவேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

உத்தேச வேலைநிறுத்தம் 1944, 1947-ம் வருடங்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களைப் போன்று உத்தேச வேலைநிறுத்தமும் சரித்திரத்தில் இடம்பெறுவதாக இருக்குமென்றும் அவர் எடுத்துக்கூறினார்.

முன்னணியின் தலைவர் திரு. எம். குணவர்த்தன பேசுகையில், வாழ்க்கைச் செலவு வெகுவாக உயர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டார். தாதிமார்கள் தேவாளர்கள் செவிலித்தாய்களாக இருந்தால் அவர்களுக்கு பெரும்பாலும் நோயாளிகளுக்கு வேறு விதமாகவும் நடந்துகொள்கிறார்கள் என அவர் குறை தெரிவித்தார்.

திருவாளர்கள் கே. ஜி. தர்மதாசா, எம். ஏ. அல்விஸ் சேனா, எம். பாலிஸபிட்டிய, டபிள்யு விஜாநந்தா ஆகியோரும் பேசினர்.

—

நினைவு அஞ்சலி

## சைவ உலகிற்கு ஈடற்றநஷ்டம்

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் ஆதீன பரிபாலன தர்ம கர்த்தாவாகிய பிரமஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள் இம்மாதம் 5—ந் திகதி சனிக்கிழமை பகல் அதிகாலை இறைவனடிசேர்ந்தார். அன்னாரது அந்தியக்கிரியைகள் சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

காலஞ்சென்ற பிரதான குருக்கள் சமஸ்கிருதம் தமிழ் ஆங்கிலம் போன்ற மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராகவும் சிறந்த ஆசாரசீலராகவும் விளங்கி சைவ சமயிகளுக்கு ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து வந்தவர். இவர் தம் வாழ்க்கை ஸ்ரீ முன்னேஸ்வரம் கோவிலின் அபிவிருத்திக்காக உழைப்பதிலேயே அர்ப்பணித்தவர். தமிழ் மக்களிடையில் மட்டுமன்றி சிங்களமக்களிடையிலுமமிகவும் பிரபலம்பெற்ற இந்துமதத்தலைவராக விளங்கினார்.

சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி பௌத்தர்கள், கத்தோலிக்கர்கள் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் போன்ற பல்வேறு சமயத்தவர்கள் யாவரும் போற்றத்தக்க சிறந்த பெரியாராக இவர் திகழ்ந்தவர்.

இவர் மாந்திரீகம் ஆயுர்வேதவைத்தியம் சோதிடம் இவற்றில் போன்றவைகளில் கைதேர்ந்தவராகவும் விளங்கினார்.

1940-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டுவரை ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் தலைவராக விளங்கிய இவருடைய காலத்தில் 1961ல் —62ல் நடைபெற்ற கோடியர்ச்சனை 65ல் நடைபெற்ற மிருத்துஞ்ஜயஹோமம் 63 ஜூலை 1ல் மகாகும்பாபிஷேகம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இவருடைய மறைவு குறிப்பாக சைவசமயத்தவர்களுக்கு ஈடு செய்ய முடியாத [illegible]

ஒரு சைவன்

## லண்டன் பயணமானார்

உரும்பராய், புதன்

கட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினதும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினதும் பழைய மாணவரான வேலுப்பிள்ளை சற்குணம் பொறியியல் துறையில் மேற்படிப்பிற்காக நேற்று கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்து லண்டன் பயணமானார். இவர் கட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பதிகளின் புத்திரராவார்.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

கேட்க அவரது கட்சியினர் மட்டுமல்ல எதிர்க்கட்சியினரும் குழுமியிருப்பார்கள்.

திருகாமராஜரை சென்னை முதன்மந்திரி பக்தவத்சலம் அவரை தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவராக்கியதோடல்லாமல் காங்கிரஸ் கட்சி தலைவராக்கியதும் ஓரளவு பெரியாரின் சக்திதான் என்று கூறலாம். காமராஜரை அவர் பச்சைத் தமிழன் என்று அன்போடு அழைப்பார்.

பின்னணியில் இருந்துகொண்டே காமராஜர் அண்ணாபோன்ற தலைவர்களை உருப்படுத்திய பெரியார் தொண்ணூறு வயதிலும் இன்றும் தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக மூச்சுவிடாமல் உழைத்துவருவது தமிழர் செய்த பாக்கியம்.

அவர் நீடூழி வாழ்க!

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

தென்னிந்தியாவில் திராவிட முன்னேற்றக் கழகம் அரசபீடத்தில் அமர்ந்துள்ளதற்கு மூலபுருடர் ஒருவர் உளரேல் அவர்தான் தொண்ணூறுவயது தாத்தாவான பெரியார் ஈரோடு வெ. ராமசாமி நாயக்கர். இவ்வுண்மையை அவருடைய தொண்ணூறுவது பிறந்த தினத்தினையொட்டி 50,000 ரூபா காரையும் 10,000 ரூபா பணத்தையும் பரிசாக வழங்கிய தமிழக அமைச்சர்களு நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

தென்னகத்தின் சமுதாய அமைப்பிலும் அதன் மூலம் அரசியலிலும் இந்த நூற்றுண்டில் பெரும் புரட்சியை உண்டுபண்ணியவர் பெரியார். ராஜாஜி காமராஜர் போன்றவர்கள் அரசியல் சுற்றுக் குட்டிகளாயிருந்த போதே ராமசாமிப் பெரியார் அரசியல் உலகில்பெரியவராகி விட்டார். 1916-ம் ஆண்டில், அதாவது 52 ஆண்டுகளுக்கு முன்பு அவர் தமிழ் நாடு காங்கிரஸை ஸ்தாபித்து அதன் காரியதரிசியாகவும், தலைவராகவும் இருந்தார் என்பதை இன்று பலர் மறந்திருப்பார்கள்

அதிலிருந்து 1924-ல் பிரிந்தவர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தார். இக் கட்சியே இன்று ஆட்சிபீடத்திலிருக்கும் தி. மு. க. வின் பாட்டனர் என்று கூறலாம். ஜஸ்டிஸ் கட்சி மறைந்த பின்னர் திராவிடக் கழகமென்ற கட்சியை உண்டாக்கினார். இக் காலத்தில்தான் தமிழக முதலமைச்சர் அண்ணா அவருக்கு பக்கபலமாக செயலதிபதியாக விளங்கினார் சமூக சீர்திருத்தத்தினுல் அரசியல் மாற்றத்தை உண்டுபண்ண முடியும் என்பதை உணர்ந்த இவர்கள் தென்னிந்திய பொதுமக்களிடையே நிலவியிருந்த மூடக் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் அகற்ற பிரசாரப்பட்டார்கள்.

பெரியார் அச்சமயம் நடாத்திய இயக்கத்தைக் கண்ட சிலர் அவரை ஒரு ‘அபிஷேகபூரணகுரு’ என்று வர்ணித்து இகழ்ந்தனர். அவருடைய செயல்களை சிலர் எல்லாமே ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பதும் உண்மை. பிள்ளையார் சிலைகள் எல்லாவற்றையும் உடைத்தெறிய வேண்டும் என்றும் ஓர் இயக்கம் நடாத்தினார். கம்பராமாயணத்தை கொளுத்தி எறிய வேண்டும்என்ற இன்னொரு இயக்கம் நடாத்தினார்.

இந்த இயக்கங்களால் தமிழர் சமுதாயம் முன்னேறியிருக்கிறதா பின்னடைந்திருக்கிறதா என்பதை பிற்கால சந்ததியார் தீர்மானிக்க வேண்டியது. எப்படி இருப்பினும் அவரது முயற்சியால் தான் இன்று தமிழகத்தில் தி.மு.க அரசாங்கம் நிலவுகின்றதென்பதை எவராலும் மறுக்க முடியாது.

1939-ம்வருடம் பெரியார் சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்றைத் துவக்கினார். தீண்டாமை ஒழிய வேண்டும் சமூக வேற்றுமைகள் நீங்கவேண்டும் எல்லோரும் கல்விகற்க வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வியக்கம் நடந்தது அவரையும் அவருடைய தோழர்களையும் சிலர் சூனாமானாக்காரர் என்று எள்ளிநகை யாடினார்கள்.

தமிழகத்தில் எந்த இடமாயினுஞ்சரி பெரியார் ஈ. வே. ரா.வின் கூட்டமென்றால் ஜனங்கள் கும்மாளம் போட்டு கூடிவிடுவார்கள். அவருடைய பிரசங்கத்தை

(4ம் கலம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சியில் கொழும்புத் திட்டத்தின் பங்கு

## 24 நாட்டு பிரதிநிதிகள் சியோலில் ஆராய்வார்கள்

கொரியா ஜனநாயகக் குடியரசின் தலைநகரான சியோலில் இம்மாதம் 14-ம் திகதியிலிருந்து ஒருவாரம் வரை நடைபெறவிருக்கும் பொருளாதார வளர்ச்சி பற்றிய கொழும்புத் திட்ட நாடுகளின் உயர் அதிகாரிகளின் மாநாடு பின்னர் 82-ம் திகதி முதல் 35ந் திகதி வரை நடைபெறும் அமைச்சர்களரிதியில் அமைந்த மாநாடு ஆகியவற்றுக்கு கொழும்பு திட்ட அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் அனுப்பி வைத்துள்ள ஆசிச் செய்திகளில் கொழும்புத் திட்டம் எதிர்காலத்தில் மேலும் பயனுள்ள வெற்றி யைத் தர இம்மாநாடுகளில் நடைபெறும் ஆலோசனைகள் உதவவேண்டுமெனத் தெரிவித்துள்ளனர்.

24 அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுகிறார்கள்.

இலங்கைப்பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தமது ஆசிச்செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

கொழும்புத் திட்டம் கூட்டுறவு மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி பயனுள்ள நன்மைகளைப்பெறலாம் என்பதை நமக்கு நன்கு தெளிவு படுத்தியுள்ளது எமது நாட்டின் தலைநகரில் இவ்வித சர்வதேச கட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதையிட்டு நாம் மிகவும் பெருமைப்படுகிறோம்.

இத்திட்டம் நல்லதொரு எதிர்காலத்தைத் தேடித் தரும் என்ற நம்பிக்கையை நன்கு அதிகரித்துவந்துள்ளது. சர்வதேச கூட்டுறவுக்கு இத்திட்டம் நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்கிவருகின்றது.

இம்மாநாடுகளில் தெரிவிக்கப்படும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் புதிய நம்பிக்கையையும் பொருளாதாரத்துறையில் நல்ல நல்ல எதிர்காலத்தையும் தேடித்தர உதவும் என்பதை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம்.

விவசாயத்துறையில் இலங்கை தனக்குரிய பங்கைச் செலுத்த தொடங்கியிருக்கிறது என்பதில் நாம் பெருமைப்படுகிறோம். சென்ற வருடத்தில் அரிசி உற்பத்தி 20 சதவீதம் உயர்ந்துள்ளது. உணவுற்பத்தியில் தன்னிறைவுக்காண நாம் இப்போது முன்னேறிக் கொண்டிருக்கிறோம். அடுத்த வருடத்தில் இதுவிஷயத்தில் 75 சதவீதத் தன்னிறைவை நாம் பெற்றுவிடுவோம் என நம்புகின்றோம்.

இதேநேரத்தில் எமது உள்நாட்டுப்பொருள்களின் ஏற்றுமதி விஷயத்திலும் நாம் நமது கவனத்தைச் செலுத்தவேண்டியுள்ளது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். நடைபெறும் மகாநாடுகளில் ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்கும் விஷயமும் பரிசீலனை செய்யப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்குமென நான் நம்புகின்றேன்.

எமது நாட்டின் நல்ல முயற்சிகளுக்கெல்லாம் முன்வந்து உதவியளித்த சகல அங்கத்துவ நாடுகளுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இம் மகாநாடு வெற்றிபெற்று கொழும்புத் திட்டத்தில் எமது ஈடுபாடுகளை மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திரு. றெக் பிறெண்டிஸ் அனுப்பி வைத்துள்ள செய்தியில் இன்னும் ஒரு வருடத்தில் கொழும்புத்திட்டம் உருவாக்கப்பட்டு இருபது வருடமாகிவிடும் என்றும் கொழும்புத் திட்டம் இதுவரை செய்துவந்த சேவைகளை மேலும் பலப்படுத்தி விருத்தி செய்ய ஏற்ற நடவடிக்கைகள் நம்பிக்கையுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

பூட்டான் மகாராஜா தமது ஆசிச்செய்தியில் கொழும்புத்திட்டம் மிக உன்னதமான சேவை புரிந்து வந்துள்ளது என்றும் பூட்டான் இத்திட்டத்தால் பெருநன்மை பெற்றுள்ளதென்றும் கொழும்புத் திட்டம் தனது நோக்கங்களில் மேலும் வெற்றிபெற மகாநாடு உதவவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. போல்ஹஸ்லக் தமது செய்தியில் எதிர்கால பொருளாதார அபிவிருத்தியில் கொழும்புத் திட்டம் தொடர்ந்து தனது உதவியை வளர்த்துக்கொள்ள மகாநாடு உதவவேண்டும் எனக் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் பர்மா தேசிய திட்ட அமைச்சர் யுதைஹான், கனடா வெளிவிவகார அமைச்சர் லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவர்ண பூமா, மலேசிய பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான், மாலைதீவு மன்னர், கம்பான் முகமது பரீட், நியூஸிலாந்து பிரதமர் திரு. ஹோலியாக் பிலிப்பைன்ஸ் வெளிவிவகார அமைச்சர் திரு. நர்சிசோ ருமஸ், சிங்கப்பூர் ஜனாதிபதி இஞ்சே யூசுப்பின் இசாக், வியட்நாம் ஜனநாயக குடியரசின் அதிபர் திரு தாகுயன் தியூ ஆகியோரும் ஆசிச்செய்திகள் அனுப்பி வைத்துள்ளனர்.

இப்பொழுது இலங்கை, அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆப்கானிஸ்தான், பூட்டான் பர்மா, கம்போடியா, கனடா இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், ஜப்பான், லாவோஸ், மலேசியா மாலைதீவு, நேபாளம், நியூசிலாந்து பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென் கொரியா, தென்வியட்நாம் தாய்லாந்து அமெரிக்கா ஆகிய நாடுகள் கொழும்புத் திட்டத்தில் அங்கத்துவம் வகிக்கின்றன.

## உலகத்தின்...

17-ம் பக்கத் தொடர்ச்சி

### 80,000 பேர் கண்டுகளிக்க...

19-வது ஒலிம்பிக் பந்தயங்களின் ஆரம்பவிழா ஒலிம்பிக் கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள 'ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் நடைபெறும். இந்த ஸ்டேடியத்தில் 80,000 நபர்கள் கண்டுகளிக்க ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 8,000 கார்களை நிறுத்தி வைக்க இடவசதியுளளது. போட்டியில் பங்கு பற்றும் வீரர்களை மைதானத்தின் நடுவில் வருவதற்காக பல சுரங்கவழிகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்டேடியத்தின் ஒருபகுதி பத்திரிகை நிருபர்களுக்கென தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் தொலைபேசிகள், டைப்ரைட்டர்கள், புகைப்படம் கழுவும் அறைகள் முதலானவை நூற்றுக் கணக்கில் உள்ளன. ஓட்டப்பந்தயம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் ஈட்டி எறிதல், குண்டெறிதல் ஆகிய போட்டிகளெல்லாம் இங்குதான் நடக்கின்றன.

### பல்வேறு அரங்குகள்

கடைப் பந்தாட்டம் "விளையாட்டு மாளிகை" எனப்பெயர்கொண்ட அரங்கத்தில் நடக்க இருக்கிறது. சுமார் 25,000 ரசிகர்கள் போட்டியை கண்டுகளிக்கும் வண்ணம் இவ்வரங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

குத்துச்சண்டை "எரினா மெக்ஸிக்கோ" என்ற அரங்கத்தில் நடைபெறும் சுமார் 20,000 பேர்கள் அமர்ந்து பார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சைக்கிள் ஓட்டப்பந்தயங்கள் "ஒலிம் வெலோடிரோம்" எனப்படும் மாபெரும் அரங்கத்தில் நடைபெறுகின்றன. ஒலிம்பிக் போட்டிகளுக்கென விசேஷமாக அமைக்கப்பட்டுள்ள அரங்குகளுள் வெலோடிரோம் முதன்மையானது.

உதைபந்தாட்டப் போட்டிகள் அஸ்டெக்ஸ் ரேடியத்தில் நடைபெறவிருக்கின்றன. உதைபந்தாட்டப் போட்டியை ஒரே சமயத்தில் சுமார் ஒருலட்சம் மக்கள் அமர்ந்து காணமுடியும் "முனிசிப்பல் ஸ்டேடியம்" 'இக்குநாசி ஹாக்கிப் போட்டிகள் நடக்கவிருக்கின்றன 35,000 ரசிகர்களுக்கு இங்கு இடவசதியுண்டு.

இவ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்தும் மூன்று வீரர்கள் மெக்ஸிகோ சென்றுள்ளனர். (தே:நி)

## இணக்கசபை

கோப்பாய், புதன்

கோப்பாய் பகுதிக்கான இணக்கச்சபைக் குழுவொன்று அண்மையில் புறக்டர் திரு. வ. முத்துக்குமாரசாமி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இச்சபையில் 17 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கோப்பாய் கிராமசபை எல்லைக்குள் இது சேவையாற்றுவதுடன் கோப்பாய் பொலிஸ் பகுதியினருக்கு ஏற்படும் சிரமத்தை குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

## தீர்மானம்

கோப்பாய், புதன்

கோப்பாய் தெற்குப் பயிர்ச்செய்கைக் குழுக் கூட்டம் திரு. எஸ். சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றபோது பின் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

O இம்மாதம் 15-ந் திகதிக்கு முன்னர் வயல்களுக்கான வரிப்பணத்தைச் செலுத்த தவறியவர்கள் மீது கோர்ட் மூலம் நடவடிக்கை எடுத்தல்.

O வயல்களுக்கு வரும் உப்புத்தன்மையைத் தடுக்கவும், உப்புக்காற்றை நீக்கவும் கோப்பாய் உப்பாற்றங்கரையில் 2000 ...

# 'சம்பவம் நடந்த இடத்தை 15 படங்கள் எடுத்தேன்'

## அலிகான் கொலை வழக்கில் படப்பிடிப்பாளர் சாட்சியம்

திருகோணமலை, புதன்

அலிகான் கொலை வழக்கு இன்றைய திருக்கோணமலை மாஜிஸ்திரேட் திரு. எஸ். பி. குணவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நாகூர் பிச்சை உம்மா சாட்சியமளித்தார்.

அலிகான் குடும்பத்தாருடன் தான் நெருக்கமாக இருந்ததாகவும், அலிகானை காணவில்லை என்று தனது வீட்டிற்கும் தேடிவந்தார்கள் என்றும் அபிசாபிச்சை நோனா ஆகியோருடன் தானும் அலிகானை தேடிச் சென்றதாகவும் உம்மா சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் அலிகானை தேடும் போது 2ம் எதிரியைச் சந்தித்ததாகவும் அலிகானை தேடுவதாக அவரிடம் சொன்னதாகவும் கூறினார்.

படப்பிடிப்பாளர் உவாவி விஜயரத்தின சாட்சியமளிக்கையில் 18ம், 19ம், 20ம் தேதிகளில் சப் இன்ஸ்பெக்டர் விஜயநாயக்காவுடன் சென்று 15 படங்கள் பிடித்தாக தெரிவித்தார்.

விசாரணையின் பின் மாஜிஸ்திரேட் இம்மாதம் 14-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# 'தோட்டங்களை தொழிலாளரிடம் ஒப்படைப்போம்'

## ஆட்சிக்கு வந்தால் இவ்விதம் நடக்கும் என்கிறார் என். எம்.

எட்டியாந்தோட்டை, புதன்

கூட்டாட்சி கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் தொழிலாளர்களைக் கொண்ட கமிட்டிகளிடம் தோட்டங்களின் நிர்வாகம் ஒப்படைக்கப்படும் என்றும் இதனால் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மேலும் சிறந்தும் என்றும் எட்டியாந்தோட்டை எம். பி. டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்துள்ளார்.

இங்கு லங்கா தோட்டத் தொழிலாளர் சங்க கட்டமொன்றில் பேசுகையிலேயே டாக்டர் என் எம். மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் பெரேரா மேலும் கூறியதாவது:

பொதுத் தேர்தல் மிகவும் சமீபித்து விட்டது. அடுத்த பொதுத் தேர்தலில் கூட்டாட்சி கட்சிகளே திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா தலைமையில் வெற்றி பெறும். நாம் பதவிக்கு வந்தால் தொழிலாளர்களின் நலனுக்குகந்த திட்டங்களை வகுப்போம்.

பலகாலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் உறுதியற்ற வாக்குறுதிகளை அளித்து தொழிலாளர்களை ஏமாற்றி வந்துள்ளார் இதன் விளைவுகள் இப்போது தெரிகிறது. வாழ்க்கைச் செலவு இப்போது வெகுவாக உயர்ந்துள்ளது.

## கோரிக்கை

கோப்பாய், புதன்

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையை மகாவித்தியாலயமாக ஆக்கித் தருமாறு மேற்படி பாடசாலைப் பெற்றோர் - ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. இக்கோரிக்கை கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர், வடபகுதி வித்தியாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

கோப்பாய், வியாழன்

இப்பகுதித் தபால் நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையிலிருப்பதாகவும், சுகாதார வசதிக் குறைவாகவும், பொதுமக்களது வசதிக்குகந்த முறையில் அமைக்கப்படாததாலும் இந்நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றியோ அல்லது தற்போதைய கட்டடத்தை நவீன வசதிகளுடன் புதுப்பித்தோ அமைத்துத் தருமாறு இப்பகுதிப் பிரமுகர்கள் பலர் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

# புதிய மாணவர் ரூ 35 கட்டவேண்டும்

உடுவில், புதன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தில் புதிதாக பயிற்சிபெற அழைக்கப்பட்டுள்ள மாணவர்கள் 35 ரூபாவைக் கட்டும் பணமாக கட்டுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அறவிடப்படும் கட்டுப் பணத்தில் 30 ரூபா மேற்படி நிலையத்தின் நூலக ஆய்வுகூட பாதுகாப்பு வைப்புப் பணமாகவும் 5 ரூபா நிலையத்தின் வைபவங்களுக்குமாகச் செலவிடப் படும்.

மாணவர் மன்றம், வணிக மன்றம், தொழில் மன்றம், சைவமன்றம் போன்றவற்றின் வைபவங்களுக்கும் மாணவ மன்றத்தால் வெளியிடப்படும் "நுண்தொழில் இளைஞன்" சஞ்சிகை வெளியீட்டுக்கும் மாணவர்களின் ஏனைய தேவைகளுக்குமாக ஒவ்வொரு மாணவனிடமும் அறவிடப்படும் ஐந்து ரூபா செலவிடப்படும்.

வலிமேற்கு

## விசைத்தறி நிலைய இடப்பிரச்னை

வட்டுக்கோட்டை, புதன்

வலி. மேற்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாஜப் பொதுக்கூட்டம் சமாஜ மண்டபத்தில் நடைபெற்றபோது விசைத் தறிநிலையம் அமைப்பதற்கு நிலம் கொள்வனவு செய்வதில் சபையில் அபிப்பிராயபேதம் மேற்பட்ட போது குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டுமே சமாஜம் நிலம் வாங்கவேண்டுமென்ற முடிவைப்பற்றி மின்வசதியுள்ள எந்த ஒரு இடத்திலாவது நிலம் பெற்று விசைத் தறிக்கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுப்பதற்கு திருவாளர்கள் சுழிபுரம் ப.நோ. கூ. சங்கத் தலைவர் சு. கந்தசாமி, சங்கானை மத்திய ப. நோ. கூ. சங்க தலைவர் ஜீவரத்தினம். அராலி விக்கினேஸ்வர ப.நோ.கூ. சங்க காரியதரிசி வே. விமூர்த்தி ஆகிய மூவரடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## கி. ச. தேர்தல்

அராலி, புதன்

புதிய அராலிக் கிராம சபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 23-ம் திகதி தாக்கல் செய்யுமென அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அரபியக்கடலில்

## இந்தியகப்பற்படை போர் பயிற்சிகள்

புதுடில்லி ஒக். 9

அரபியக்கடலில் இந்திய கப்பற்படை நேற்றுக்கடைசி நாளாகத் தனது கப்பற் போர்ப் பயிற்சிகளை நடத்தியது.

நீர்மூழ்கி எதிர்ப்புப் பிரயோகங்களினுக் கடும் பயிற்சியும் இடம் பெற்றது. ஒரு சில நிமிடங்கள் அரபியக் கடல்

## கி. பாகிஸ்தான் வெள்ளம்

### 175 பேர் பலி

ராவல் பிண்டி, ஒக். 9

கிழக்குப் பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் 175 பேர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையான கப்பற் போர்க்காட்சியாகத் தோற்றமளித்தது.

# தமிழ் மொழி

## (அ) பாடத்திட்டம்

### மாதிரி வினா

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக;-
   - (i) தற்காலப் பிரயாண வசதிகள் என்னும் பொருள் பற்றிக் கட்டுரை வரைக.
   - (ii) நீர், இலக்கிய மன்ற ஆண்டு விழாவின் வரவேற்புக் குழுத் தலைவராகத் தெரியப்பட்டுள்ளீர். ஆண்டு விழாவின் போது நிகழ்த்தும் வரவேற்புரையை எழுதுக.
   - (iii) மணிக்கூட்டின் சுயசரிதை.
   - (iv) இலங்கையில் உணவுப் பொருள் விலையேற்றத்தைக் குறைப்பதற்குத் தகுந்த வழிவகைகளைக் குறிப்பிட்டு பத்திரிகைக்கு ஓர் அறிக்கை எழுதுக.
   - (v) நீர் விரும்பும் நூலாசிரியர் ஒருவர்.
2. பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பகிலாகச் சுருக்கி எழுதுக:-

இனி, செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பேணி வளர்த்த பெருமையும் ஈழநாட்டிற்கு உண்டு. மெய்வருத்தம் பாராது பழைய ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், வீரசோழியம், இலக்கண விளக்கம், ஆகிய இலக்கண நூல்களையும், கலித்தொகை, சூளாமணி முதலிய இலக்கிய நூல்களையும் முதன் முதலாக அச்சிட்டுத் தமிழகத்தாருக்கு உதவிய பெருமை யாழ்ப்பாணத்திலே தோன்றிய தாமோதரம்பிள்ளையவர்களுக்கே உரியதாகும். இன்னும் அருந்தமிழ்ப் புலமையும் கட்டுரைவன்மையும் வாய்ந்து தமிழ்மொழிக்கும் சிவநெறிக்கும் அரும்பெருந் தொண்டுசெய்த ஆறுமுகநாவலரை அறியாதார் இத்தமிழுலகில் உளரோ? அந்நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்து தில்லையம்பதியிலே திருத்தொண்டு புரிந்து எல்லையற்ற புகழ் எய்தினார். அங்கு அவர் நிறுவிய கல்லூரியும் அறநிலையங்களும் இன்றும் நடைபெற்றுவருகின்றன. யாழ்ப்பாணத்திலே தோன்றிய மற்றொரு புலவர் சபாபதி நாவலர். தமிழகத்திலுள்ள திருவாவடுதுறை மடம் அவரை ஆதீன வித்துவானாக நியமித்துச் சிறப்புச்செய்தது. இன்னும் முத்தமிழ் நடுநாயகமாக விளங்கும் இசைத்தமிழுக்கு இந்நாளில் இணையற்ற தொண்டு செய்த புலவர் பெருமானும் இந்நாட்டவரேயாவர். பழந் தமிழ்நாட்டிற் சிறந்த இசைக்கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும் இசையின் நலத்தையும் ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெயரால் இசையுலகத்திற்கு அரியதோர் விருந்தளித்த விபுலாநந்த அடிகளை அறியாதார் அறியாதாரே.

3. பின்வருஞ் செய்யுட்களை வாசித்த பின்னர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக:-

கலி நவனது மன உறுதியைக் கண்டது.

(i) பெய்ம்மலர்ப் பூங்கோதையிரியப் பிரியாத
செம்மையுடை மனந்தான் செங்கோலன்—
பொய்ம்மை
விலக்கினான் நெஞ்சத்தை வெருக்கி நின்று
கலக்கினான் வஞ்சக்கலி.

(ii) வஞ்சக்கலிவலியான் மாகத்தரா வலைக்கும்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல—விஞ்ச
கதித்த தேர்த் தானை வயவேந்தன் நெஞ்சத்
துதித்ததே வேறோர் உணர்வு.

(iii) காரிகைதன் வெந்துயரங்காணுமக் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கும் ஒருயிர் போல் எய்தியதோராடை
அரிதற்கு வனினைந் தானிங்கு.

(iv) எண்ணிய எண்ண முடிப்ப இக்கவேந்தன்
கண்ணியதை யறிந்து காய்கலியும்—
பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீக்கக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து.

(அ) இச் செய்யுள்களின் பொருளைத் தொகுத்து எழுதுக?

(ஆ) இரண்டாம் செய்யுளிலுள்ள உவமான உவமேயங்களை விளக்குக?

(இ) நெஞ்சத் துதித்ததே, அரிதற் கவனினைந்தானிங்கு, தேமொழி, மாகத்தராவலைக்கும், தேர்த்தானை வயவேந்தன் என்ற சொற்றொடர்களைத் தனிச் சொற்களாகப் பிரித்தெழுதுக?

(ஈ) வினைத்தொகை, இறந்தகால வினைமுற்று, உரிச்சொல், பெயரெச்சம் வினையெச்சம் என்பவற்றுக்குச் செய்யுள்களிலிருந்து உதாரணம் காட்டுக?

4. பின்வருவனவற்றின் பொருள் விளங்க அவற்றை வசனங்களில் அமைத்தெழுதுக?
   பிரரேணை, கிளர்ச்சி, உடல்பொருளாவி, உறவினர், பாசாங்கு, விரோதம், சிங்காதனம், ஏட்டுப் பிரதி, சந்தர்ப்பம், சான்றோர்.
5. பின்வருஞ் சொற்களுக்குரிய எதிர்ச்சொற்களை அவற்றின் பொருள் விளங்க வசனங்களில் அமைத்தெழுதுக? — இலக்கணம், வட்டம், ஞானம், சாதகம், இல்லறம்.

[விடை 7-ம் பக்கம் பார்க்க]

# "24 வருடமாக உழைத்து நாம் கண்டபயனென்ன?"

## ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தினர் கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், புதன்

"பதவி உயர்வு பெறுவதற்கு வழிவகைகள் எதுவுமின்றி வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத சம்பளத்துடன் 24 வருடங்கள் சேவை புரிந்த நாம் கண்ட பயன் என்ன?" என்று ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தினர் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண எம். பி.யும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஊடாக அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் இப்படிக் கேட்டிருக்கிறார்கள்.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

"அரசாங்க சேவையில் விசேடமாக, தபாற்கந்தோர் தலைவர், தந்தியாளர், சுங்க இலாகா, புகையிரதப்பகுதி, அரசாங்கக் கட்டுத்தாபனங்கள், வங்கிகள் போன்றவற்றில் நிரவப்பட்ட திட்டத்தின்படி ஊழியர், திறமைகாண் பரீட்சையில் சித்தியடைந்ததும் அவர்கள் பதவி உயர்த்தப்படுகிறார்கள். இது ஊழியர்களின் திறமைக்கும், அனுபவத்துக்கும் ஒரு சோடையாகவுள்ளது.

ஆனால் எமது சேவையில் சில உத்தியோகத்தர்களும் நெடுகவும் ஒன்றாகவே மதிக்கப்படுகிறார்கள். காலியிடங்கள் ஏற்பட்டுப் பதவியுயர்வு கிடைத்தாலேயன்றி பதவி உயர்வுக்கான பரீட்சையில் சித்தியடைந்தாலும் அவர்களின் பெயர்கள் சித்தியடைந்தோர் பட்டியலில் காலியிடங்கள் வரும்வரை வருடக்கணக்காகத் தூங்குமேயன்றி உடனடியாக நியமனங்கள் கொடுக்கப்படுவதில்லை. நியமனம் அதிர்ஷ்டத்திலும், சந்தர்ப்பத்திலுமே தங்கியுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு உள்ளூராட்சி சேவையில் சேருவதற்கு எல்லா வழிகளும் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் உள்ளூராட்சி ஊழியர்கள் அரசாங்க சேவையில் சேருவதற்கு எல்லாக் கதவுகளும் மூடப்பட்டுள்ளன. இப்படியே நாம் வருடக்கணக்காக அனுபவித்து வரும் துன்பங்கள் கணக்கிலடங்கா. ஆகவே நாங்கள் சமர்ப்பித்திருக்கும் கோரிக்கைகளை நன்றாகப் பரிசீலனை செய்து, நிவாரணமளிக்குமாறு வேண்டுகிறோம்."

[ந. நி]

## இளைஞர்களிலுல் அபிவிருத்தி

உடுப்பிட்டி, புதன்

"இளைஞர்களின் உற்சாகத்தினாலும் முயற்சியினாலும் கிராமங்கள் அபிவிருத்தி அடைந்து வருகின்றன. ஒரு கிராமத்தின் தேவையே அக் கிராமமக்களின் தேவையுமாகும். கிராமத்தின் குறைகளை நிவர்த்தி செய்வதன் மூலமே எமது சுய தேவையையும் பூர்த்தி செய்யலாம்.'

மேற்கண்டவாறு தென் கரணை வல்லுவர் சனசமூக நிலையத்தினரின் மூன்றுவது சிரமதான இயக்கத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு கி. கோபால் கூறினார், மேற்படி நிலையத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சிரமதானமூலம் வீதியைச் செப்பனிட்டனர்.

## கைதிகள் தப்பிவிட்டனர்

கொழும்பு, புதன்

கண்டி போகம்பரை சிறைச்சாலையிலிருந்து இரண்டு ரிமாண்ட் கைதிகள் சுவரேறிக் குதித்துத் தப்பிச் சென்றுவிட்டார்கள். இவர்களில் ஒருவர் பல தடவைகள் சிறைத் தண்டனை அனுபவித்த ஐ. ஆர். வி ஜய.

ரிமாண்டிலிருந்த மற்றும் ஐந்து கைதிகளுடன் சிறை வைக்கப்பட்டிருந்த இந்த இருவரும் சுவர்மீது ஏறிக் குதித்துத் தப்பிச் சென்றுவிட்டனர்.

இவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதில் பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

## "சிறந்த தொண்டு"

யாழ்ப்பாணம், வியா.

"ஈழத்துச்சைவர்களுக்கும் அவசியம் வேண்டிய ஒரு தேவையை இச்சபை செய்துள்ளது. திருப்புகழ்களையும் திரட்டி ஒரு நூலாக இச்சபை வெளியிடுவது ஒரு சிறந்த தொண்டாகும். அதுவும் சைவர்கள் மத்தியில் சமய அறிவு அவசியம் வேண்டிய இக்காலத்தில் வெளிவருவது காலத்துக் கேற்ற சிறந்த ஒரு சேவையாகும்" என்று துணுக்காய்க்காரி காரியதரிசி திரு. மு. தம்பிமுத்து வவனிக்குளச் சிவாலயத்திருப்பணிச் சபையாரின் வெளியீடாகிய" ஈழமண்டலத்தேவாரமும் கதிர்கா

மத்திருப்புகழும் என்னும் நூலைவெளியிட்டு வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் வவனிக்குளச்சிவாலயம் மடத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. ச கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.

[ந. நி]

## பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள்

குரும்பசிட்டி, புதன்

யாழ்ப்பாணம் கலாயாலயமேல் மாடியில் ஞாயிற்றுக்கிழமை திரு க. சதானந்தன் தலைமையில் நடைபெற்ற வட இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்க கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபை உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் கே. சிவசுப்பிரமணியம், உப தலைவர் இ. அப்பாத்துரை, செயலாளர் க. கனகபரமேஸ்வரன், உதவிச் செயலாளர் செல்வி கருணா கந்தையா. தனாதிகாரி கே. சதானந்தன், புள்ளிவிபர உத்தியோகஸ்தர் சபா ஜெயராசா, பிரசாரப் பிரதிநிதிகள் 13 பேர் தொகுதிகளுக்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

## வாலிபர் பிழைத்தார்

உடுவில், புதன்

வேலை நேரத்தில் திடீரென மின்சாரத் தாக்குதலுக்குட்பட்ட வாலிபர் ஒருவர் புத்தி சாதுரியத்தினால் உயிர்பிழைத்துக்கொண்டார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள பிரபல அச்சுக்கூடம் ஒன்றில் இயந்திர இயக்குனராகவும் எழுத்துக் கோர்ப்பவராகவும் கடமையாற்றிவரும் இவ்வாலிபர் வேலை நேரத்தின் போது எதிர்பாராதவிதமாக மின்சாரத் தாக்குதலுக்கு ஆளாகினார். எனினும் தனது விவேகமான புத்திசாதுரியத்தால் சிறு காயங்களுடன் மின்சாரத் தாக்குதலிலிருந்து விடுபட்டுக்கொண்டார். இவரது கைகளில் மட்டும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

## வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சை

உடுவில், புதன்

அரசாங்க கல்வித் திணைக்களத்தினரால் வருடாவருடம் நடாத்தப்பட்டுவரும் வர்த்தகத் தராதரப் பத்திரப் பரீட்சை இவ்வருடம் டிசம்பர்மாதம் 24-ம் திகதி நடைபெற இருக்கிறது.

இப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை இம்மாதம் 26ம் திகதிக்கு முன்னராக பரீட்சை இலாகாவிற்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் இம்மாதம் 22-ம் திகதிக்குள் விண்ணப்பப் பத்திரங்களை கொழும்பு பிரதம பரீட்சைக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாமென்றும் கல்வி இலாகாவினர் அறிவித்துள்ளனர்.

## ரொடீஷியப்......

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேச பிரிட்டிஷ்—ரொடீஷிய பிரதமர்கள் சந்திப்புப்பற்றி ஆபிரிக்க நாடுகள் தமது சந்தேகத்தையும், கவலையையும் வெளியிட்டுள்ளன ரொடீஷியாவில் ஆபிரிக்க பெரும்பான்மை மக்களுக்கு அரசியல் உரிமை அளிப்பதற்கு முன்னர், பிரிட்டன் ரொடீஷியாவுக்குச் சுதந்திரமளிப்பதில்லையென்ற ஐ. நா. தீர்மானத்துக்கெதிராகப் பிரிட்டன் நடந்துகொள்ளக் கூடாது என்று ஆபிரிக்கத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19-வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி

# உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள மெக்ஸிக்கோ

## 10 கோடி ரூபாய் தண்ணீர் போல் செலவாகிறது

19-வது ஒலிம்பிக் விளையாட்டு இம்மாதம் 12-ந் திகதி மெக்ஸிக்கோவில் ஆரம்பமாகின்றது.

விளையாட்டுப்பந்தயங்களின் வரலாற்றில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகில் உள்ள முக்கிய நகரங்களுள் ஏதாவது ஒன்றில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டி இணையற்ற இடத்தை வகிக்கின்றது. கோடிக்கணக்கான ரசிகர்கள், ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்கள், அவர்கள் பங்கேற்கும் நூற்றுக்கணக்கான பந்தயங்கள், இப்பந்தயங்களின் முடிவுகளைக் குறித்து உலகின் பற்பல நகரங்களுக்குச் செய்திகள் அனுப்பும் பல்லாயிரக்கணக்கான பத்திரிகை நிருபர்கள் ஆகியோர் பங்கு கொள்ளும் பிரமாண்டமான ஒலிம்பிக் விளையாட்டுக்களை வெற்றிகரமாக நடத்தும் பெருமை. எளிதில் எல்லா நாடுகளுக்கும் கிடைப்பதில்லை. பதினைந்து நாட்கள் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியை சிரசக நடாத்த பல கோடி ரூபாய்களை தண்ணீராகச் செலவு செய்ய வேண்டும். கடந்த முறை ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது.

### 19—வது ஒலிம்பிக்

19-வது ஒலிம்பிக் போட்டியை நடத்தும் பெருமை இம்முறை மெக்ஸிக்கோ நாட்டுக்குக் கிடைத்துள்ளது. பெறற்கரிய வாய்ப்பை பெற்ற மெக்ஸிக்கோ அரசாங்கம் தனது முழு ஆதரவையும் ஒலிம்பிக் குழுவுக்குக் கொடுத்துள்ளது. மெக்ஸிக்கோவில் நடைபெறும் இவ் ஒலிம்பிக் போட்டி உலக மக்களின் கவனத்தை இம்முறை மிகவும் கவர்ந்துள்ளது. காரணம் இப்போட்டிக்கு இம்

— ஏ. தேவராசா —

முறை ரொடீஷியாவையும், தென் ஆபிரிக்காவையும் சேர்த்துக்கொள்ள ஒலிம்பிக் குழு தீர்மானித்தபோது அதை எதிர்த்து பல நாடுகள் ஆட்சேபம் தெரிவித்ததால் ரொடீஷியாவையும் தென் ஆபிரிக்காவையும் சேர்த்துக்கொள்ளும் எண்ணத்தை குழு கைவிட்டது. சென்ற வாரம் ஒலிம்பிக் போட்டி நடைபெறப்போகும் மைதானத்துக்கருகாமையில் மெக்ஸிக்கோ மாணவர்கள் கிளர்ச்சி செய்ததால் 30க்கும் அதிகமான மாணவர்கள் கொல்லப்பட்டார்கள். 700க்கு அதிகமானோர் கைதுசெய்யப்பட்டு ஒலிம்பிக் போட்டி முடிவடையும்வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். ஒலிம்பிக் போட்டிகளுக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாப்பதற்காக மெக்ஸிக்கோ நகரைச் சுற்றி தற்போது 1500 ரகசியப் பொலிசார் இரவும் பகலும் கண்விழித்தவண்ணமிருக்கிறார்கள். இவ்வொலிம்பிக் போட்டியை காண்பதற்காக என்றுமே இல்லாத அளவு உலகின் பலவேறு நாட்டு அரச குடும்பத்தினர் மெக்ஸிக்கோ சென்றுள்ளனர்.

### ஒலிம்பிக் கிராமம்

ஒலிம்பிக்போட்டிகள் நடக்கும் பந்தயப் பூமியும் அதைச் சுற்றியுள்ள பிரதேசமும் 'ஒலிம்பிக் கிராமம்' என அழைக்கப்படுகிறது. இந்தக் கிராமத்தில் தான் இம்முறை நூறுநாடுகளைச்சேர்ந்த 7500 விளையாட்டுவீரர்கள், அந்நாடுகளின் 1000 பிரதிநிதிகள், மற்றும் 1500 பத்திரிகை நிருபர்கள் தங்குவதற்காக 904 அறைகள்கொண்ட 29 கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 2500 ஊழியர்கள் இரவும் பகலும் அயராது பணியாற்றி இக்கட்டடங்களை 7 மாதங்களுக்குள் அமைத்துள்ளனர். இக்கட்டடங்களுக்கு அருகில் விளையாட்டு வீரர்களின் பயிற்சி நிலையங்கள், ஓய்வு அறைகள், பொழுதுபோக்கு மன்றங்கள், மாபெரும் உணவு அறைகள் எல்லாம் உள்ளன. இந்தக் கிராமத்தின் பரப்பளவு சுமார் தொண்ணூறாயிரம் சதுர மீட்டர்கள்.

[5-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் மொழி

### விடைகள்

3. செய்யுள்களின் பொருள்:

(அ) சூட்டப்பட்ட மலர்களுடைய அழகிய தலைவனைப் பிரியும்படி, எப்பொழுதும் செம்மையாகிய பண்பு நீங்காததன்மையுடையவனும், செங்கோல் நெறி பிறழாதவனும், பொய்ம்மையை அறவே நீக்கி வாய்மை வழுவாதொழுகுபவனுமாகிய தனது மனத்தை மாறுபாடடையச்செய்து நின்று குழப்பமடையும்படி செய்தான் வஞ்சனை வாய்ந்த கொடிய கலி.

வஞ்சனை மிக்க கலியின் வலிமையினால் ஆகாயத்தில் இராகு என்னும் பாம்பு வளைத்துப் பற்றும் சூரியனிடம் வந்துசேரும் கரிய ஒளிபோல மேன்மையாக மதித்த தேர்ப்படையையுடைய வெற்றிவேந்தனாகிய நளனது மனத்தில் மாறுபட்ட எண்ணம் தோன்றிற்று. தமயந்தியினது கொடுந்துன்பத்தைக் காணமாட்டாமல் அவளை விட்டுப் பிரிந்து, அந்த மிக்க இருளிலே போகக் கருதி எழுந்து நின்று, இருவர்க்கும் ஒருயிர் போன்று ஒன்றாக இருந்த ஆடையை அறுத்து வேறாக்க எப்பொழுது எண்ணினான். கலிகையை நீக்கும் அந்தக் காரிருளிலே அவன் எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு வலிமைமிக்க வேந்தன் கருதினதை அறிந்து மகிழ்ச்சி கலியும், இசைக்கு உறவுபோன்ற இனியபேச்சினையுடைய தமயந்தியை நளனை விட்டுப் பிரிக்கக் கருதி ஒளிமிக்க வானகப் பக்கத்திலே வந்து இருந்தான்.

(ஆ) உவமானம்: சூரியனிடம் இராகுவின் கரிய ஒளி கலந்தமை. — உவமேயம்: செங்கமலத்தவனாகிய நளனது மனத்தில் வேறோர் எண்ணந் தோன்றியமை.

| உவமானம் | — | உவமேயம் |
| --- | --- | --- |
| சூரியன் | - | நளனுடைய மனம். |
| இராகுவின் கரிய ஒளி | - | வேறோர் உணர்வு. |

(இ) நெஞ்சத்துதித்ததே - நெஞ்சத்து + உதித்தது + ஏ
அரிதற்கவனிவனித்தாளுக்கு - அரிதற்கு + அவள்
நினைந்தாள் + ஆங்கு
தேமொழி— தேன் + மொழி
மாகத்தராவணைக்கும் -- மாகத்து + அரா + அணைக்கும்.
தேர்த்தானைவயவேந்தன் -- தேர் + தானை + வயம் வேந்தன்.

(ஈ) வினைத்தொகை:- விளரொளி [விளர்கின்ற ஒளி]
இறந்தகால வினைமுற்று:- கலக்கினான்.
உரிச்சொல்:- கார் (கரிருள்)
பெயரெச்சம்:- எண்ணிய (எண்ணம்)
வினையெச்சம்:- நின்று (கலக்கினான்)

4. பிரேரணை:- அரசாங்கக் கட்சி அங்கத்தவர் கொண்டுவந்த பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேறியது.
கிளர்ச்சி:- தொழிலாளர் புதிய சட்டத்தை கேள்வியுற்றுக் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர்.
உடல்பொருளாவி:- காந்தியடிகள் உடல்பொருளாவி மூன்றினையும் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தார்.
உறவினர்:- அசோக மன்னர் உறவினர் அயலவர் என்ற வேற்றுமை பாராட்டாது எல்லோர்க்கும் சமமான நீதி வழங்கினான்.
பாசாங்கு:- நண்பர்கள்போற் பாசாங்கு செய்யும் நயவஞ்சகரிடத்தில் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.
விரோதம்:- துரியோதனன் பாண்டவர்மீது இளமை தொட்டே விரோதம் கொண்டிருந்தான்.
சிம்மாசனம்:- கொடியவனாக ஆண்ட மன்னனுடைய சிம்மாசனம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.
ஏட்டுப்பிரதி:- சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் பழைய ஏட்டுப் பிரதிகளை ஆராய்ந்து பல நூல்களை பதிப்பித்தார்.
சந்தர்ப்பம்:- கலியுருவின் நளமகாராசனுக்குத் தீங்கு செய்ய ஏற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.
சான்றோர்:- சங்ககாலத்துத் தமிழ் சான்றோர் அரசனை நல்வழிப்படுத்தினர்.

5. இலட்சணம் -- அலட்சணம்
அரக்கியின் அலட்சணமான தோற்றத்தைக் கண்டு சீதை அஞ்சினாள்.
வாட்டம் -- மலர்ச்சி
விருந்தோம்புவாரது முக மலர்ச்சியைக் கண்டு விருந்தினர் மனம் பூரித்தார்.
ஞானம் -- அஞ்ஞானம்.
மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கி நல்வழியில் வளர்த்தலே சான்றோரின் கடனாகும்.

சாதகம் -- பாதகம்
பாதகமான சூழ்நிலையில் அரசன் பகைவர் மீது படையெடுக்க மாட்டான்.
இல்லறம் -- துறவறம்
துறவறத்தை மேற்கொண்டவர்களைப் பாதுகாத்தல் இல்லறத்தார் கடன்.

எதைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வர் சிலர்
"இதுதான் வேண்டும்"
என்று குறிப்பிட்டுக்கேட்பர் சிலர்
★ அழகு ★ உழைப்பு
★ நவீன மோஸ்தர்
விரும்பும் அனைவரும் குறிப்பிட்டுக் கேட்பது
"லதா சேட்ஸ்"
தரத்தில் உயர்ந்தவை
LATHA
விலையில் மலிந்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பிவந்த சிறுவன் காட்டிய இரகசிய பாதை

யாழ்ப்பாணம், வியாழன் மன்னூர்ச் சிறுவர்களை இம்சிக்கும் கூட்டத்தைக் கண்டு பிடிப்பதற்கு அங்கிருந்து தப்பிவந்த சிறுவன் பெரும் உதவியளித்துவருவதாக பொலிஸ் வட்டாரங்கள் இன்று காலை தெரிவித்தன. இதுபற்றிய இரகசிய தகவல் ஒன்று மன்னூரிலிருந்து வடமகுதி பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு கடந்த நள்ளிரவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு இந்தச் சிறுவனின் உதவியுடன் மன்னூர் காட்டுக்குள் குறிப்பிட்ட கூட்டத்தார் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கச் சென்ற பொலிஸார் அங்கு மேலும் பல புதிய தகவல்களைச் சேகரித்துள்ளனராம். அடர்ந்த காட்டுப்பாதையால் மன்னூரிலிருந்து அனுராதபுரம் புகையிரத நிலையத்துக்குச் செல்லும் புதிய பாதையொன்றையும் நேற்றிரவு இச்சிறுவன் பொலிஸாருக்குக் காட்டிக்கொடுத்துள்ளான்.

காட்டுக்குள்ளிருந்து கடற்கரைக்குச் செல்லும் இரகசிய பாதையொன்றை இப்போது பொலிஸார் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இப்பாதை கண்டுபிடிக்கப்பட்டால் குறிப்பிட்ட சிறுவர்களை இம்சிக்கும் கூட்டத்தைக் கண்டுபிடிப்பதில் எந்தக் கஷ்டமும் ஏற்படாது என பொலிஸார் பூரணமாக நம்புகின்றனர்.

சிறுவர்களை இம்சித்து வேலைவாங்கும் கூட்டத்தார் இங்குள்ள சிறுவர்களுக்கு ஏதாவது சுகவீனம் வந்தால் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தித் தம்மை மறைத்துவிடுவதென்றும் ஒரு சிறுவனுடன் மற்றச் சிறுவனைக் கதைக்கக்கூட விடுவதில்லையென்றும், சகலரையும் இவர்கள் 'ஏடேய்' என்ற பெயர் சொல்லியே அழைப்பதென்றும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

புலன்விசாரணையை மேற்கொள்ள வடமகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர். சுந்தரலிங்கம் இன்றிரவு மன்னூர்ப்பகுதிக்கு விஜயம்செய்வாரெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. [ஈ. நி.]

# "ஊரில் வந்து கூப்பிடார்கள்"

யாழ்ப்பாணம், வியாழன் "சம்பவம் நடந்த இரவு நான் வழக்கம்போல் தாயாருடன் நித்திரைசெய்தேன். நள்ளிரவு இரு எதிரிகளும் வந்து என்னைக் கூப்பிட்டனர். நான் எழுந்து சுதிர்காத்தைச் சேர்ப்பித்து நடந்து சென்றேன் அங்கிருந்து வசாவிளானுக்குச் சென்றோம்"

கரையூர் பெண் கடத்தல் வழக்கில் சாட்சியமளித்த 13 வயதான குணவதி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்குநேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜனாப் கமைட் ஜமீல் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் கரையூரைச் சேர்ந்த ரபேல் மகள் குணவதியை, வசாவிளானைச் சேர்ந்த தொம்மை தேவசகாயம், பருத்தித்துறையைச் சேர்ந்த அலன் ஆசைடேவிட் ஆகியோர் கடத்திச் சென்றதாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிர் சார்பில் புறக்டர் ஜே. ஐ. ராசரத்தினமும், 2-ம் எதிர் சார்பில் அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கம் புறக்டர் பி. கதிரவேலுவின் அனுசரணையுடனும் ஆஜரானார்கள்.

குணவதி மேலும் சாட்சியமளிக்கையில் வசாவிளானிலிருந்து மறுநாள் அச்சுவேலிக்குச் சென்று அங்கு ஒரு கருசேலில் தங்கியதாகவும், மறுநாள் ஆனையிறவிற்கு சென்றதாகவும் அங்கு பொலிஸார் எல்லோரையும் கைதுசெய்ததாகவும் கூறினார்.

இளம் பெண்ணின் தாயாரான நேசம் சாட்சியமளிக்கையில் அன்ற வழக்கம்போல் நித்திரை செய்ததாகவும், மறுநாள் மகளைக் காணாததால், பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும் கூறினார்.

எதிரிகள் சார்பில் சாட்சிகளை அழைக்கவில்லையென எதிரியின் வழக்கறிஞர்கள் கூறியதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம்மாதம் 16-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# உணவுப்பொருள் இறக்குமதிக்கு 2 கோடி ரூபாய்

கொழும்பு, புதன் உணவுப் பொருள்களின் இறக்குமதிக்கென அரசாங்கம் இரண்டு கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறது.

பருப்புவகைகள், கருவாடு மிளகாய், கடுகுப்பால் ஆகியவைகளே உடனடியாக இறக்குமதி செய்யப்படவிருக்கும் உணவுப்பொருள்களாகும்.

இவைகளில் கருவாடுதான் அதிகளவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறதாம்.

கருவாடு மற்றும் உணவுப் பொருள்களின் சீரான விநியோகம் பற்றியும் இப்பொருள்களின் இறக்குமதிபற்றியும் உணவுஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. பி. மகாதேவா தலைமையிலுள்ள உணவு விநியோக இணைப்புக் குழு திட்டம் தயாரித்துவருது.

# இந்திராணியின் கணவருக்கு 10 வருட கடூழிய சிறை

கொழும்பு, புதன் பாடசாலை ஆசிரியையான இந்திராணி கொலை வழக்கில், எதிரியான இந்திராணியின் கணவர் கருணைமுனி சந்திரபால குணசேகராவுக்குகளுத்துறை அசைஸ் நீதிமன்றத்தில் அசைஸ் கமிஷனர் திரு எம். ஏ. டி. எஸ். விஜயசேகரா பத்து வருடக் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கொலை செய்யும் நோக்கமில்லாமல் கொலை செய்திருக்கிறார் என ஜூரிசபையினர் தெரிவித்த அபிப்பிராயத்தைத் தொடர்ந்து அசைஸ் கமிஷனர் எதிரிக்கு பத்துவருடச் சிறைத்தண்டனை விதித்தார்.

1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26-ம் திகதி நாகொடை ஆஸ்பத்திரி ஆய்வுகூட நிபுணர் கருணைமுனி சந்திரபால குணசேகரா, அவரது மனைவியான களுத்துறை பாலிகா வித்தியாலய ஆசிரியையான இந்திராணியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எட்டுத் தினங்களாக விசாரணை செய்யப்பட்ட இவ்வழக்கில் எதிரி சார்பில் வழக்கறிஞர் ஜி ஜி. பொன்னம்பலம், வழக்கறிஞர்களில் நெவில்சமரக்கோன், பசில் குணவர்த்தன ஆகியோரின் உதவியுடனும் புறக்டர்கள் லயனல் விக்கிரமசிங்க, பிரான்சிஸ் J. சில்வா ஒலிவர் பி. வீரசேன, எஸ். கருணாரத்தின ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் வே. இரத்தினசோர் ஆஜரானார்.

# விரேதத்துடன்சென்றவர்க்கு நேர்ந்த கதி

கடுப்பிட்டி, புதன் மயானத்துக்குப் பிரேதம் கொண்டு சென்றவர்களுக்கு அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்ததாம்!

மயானத்தின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தது இவர்களுக்கு முதல் அதிர்ச்சியாக அமைந்தது. கவலையுடன் பிரேத ஊர்வலத்தில் வந்தவர்களுக்கு இந்தத்தடையிருந்த ஆத்திரத்தைக் கொடுத்தது.

இந்த சம்பவம் நெல்லியடி பட்டினசபைக்குப் பட்ட மயானமொன்றில் நடந்தது.

மயானத்தின் காவலாளர் மயானத்தின் கேட்பூட்டின் திறப்பை தொலைத்துவிட்டது பின் தெரியவந்து பூட்டை உடைத்து உள்ளே சென்றவர்களுக்கு மற்றொரு அதிர்ச்சிகாத்துக் கொண்டிருந்தது.

சமைக்கிரியைகளுக்கான முக்கிய சாமான்கள் கொண்ட பெட்டியின் திறப்பையும் பாதுகாவலர் தொலைத்து விட்டதாக அறிந்தவர்கள், மீண்டும் பூட்டு உடைப்பு வேலையில் ஈடுபடாமல், பக்கத்து வீடொன்றிலிருந்து தேவையான சாமான்களைப் பெற்று சமைக்கிரியைகளைச் செய்தனர்.

இதனால் நீண்ட நேரம் காலதாமதம் ஏற்பட்டதாகத் தெரிவித்தனர்.

## சர்வதேச சிறுவர் வாரம்

உடுவில், புதன் மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட சகல பாடசாலைகளும் கலந்து கொள்ளக்கூடிய சர்வதேச சிறுவர் வாரக் கொண்டாட்டம் இம்மாதம் நடுப் பகுதியில் நடைபெற இருக்கிறது.

இணுவில் மகளிர் பாடசாலையில் நடைபெற இருக்கும் இக் கொண்டாட்டம் இம் மாதம் 14-ம் திகதி முதல் 19-ம் திகதி வரை நடைபெறும்.

14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், சித்திரப் போட்டிகள், நடன, நாடகப் போட்டிகள் ஆகியவையும் பகிரங்கக் கூட்டமும் இக் கொண்டாட்டத்தில் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெறும். மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட எல்லாப் பாடசாலைகளும் இப்போட்டிகளில் பங்கு பற்றலாம்.

## பட்டதாரி மாணவர்க்கு சலுகை

கொழும்பு, புதன் கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரைகளில் கலந்து கொண்டும், கல்லூரிக் கழக சட்ட விதிகளுக்கு அமைய நடந்துகொண்டும், பகுதி நேரதொழில்களிலும், வேலைகளிலும் ஈடுபடுவதற்கு அனுமதியளிப்பதென கல்லூரிக் கழக 'செனட்' தீர்மானித்திருப்பதாக கொழும்பு பல்கலைக் கழக துணைவேந்தர் திருவாசகம் ஏ. டி. சில்வா தெரிவித்திருக்கிறார்.

## ஐ. ஆர். சி. அகப்பட்டார்

இமையாணன், புதன் சுமார் ஒருவருடகாலம் தலைமறைவாகத் திரிந்த ஓர் ஐ ஆர். சி யை பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் ஒருவர் மிகவும் கஷ்டப்பட்டு துரத்திப்பிடித்தாராம். இரவு ரோந்து சுற்றுவதற்காகச் சென்ற திரு. எம். பெரேரா என்பவர் தும்பளைச் சந்திக்குச் சென்றபொழுது குறிப்பிட்ட நபரைக் கண்டதாகவும், உடனே அவரைப் பிடித்தபொழுது அவர் திமிறிக்கொண்டு ஓடியதாகவும், தொடர்ந்து பெரேரா துரத்திப்பிடித்ததாகவும் தெரிகிறது.

பருத்தித்துறையைச் சேர்ந்த இவர், ஒவ்வொரு மாதமும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையெழுத்திட வேண்டியவர் என்றும் ஒருவருடகாலம் பொலிஸ் நிலையத்திற்கு ஆஜராகாமல் தலைமறைவாகி இருந்தாரென்றும் பொலிஸார் கடுமையாகத் தேடிவந்தனர் என்றும் அறியப்படுகின்றது.

இவர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## 'கலவன் பாடசாலை வேண்டாம்'

கொழும்பு, புதன் ஆண்களும் பெண்களும் கலந்து படிக்கும் கலவன் பாடசாலை எதையும் புதிதாக நிறுவுவதற்கு அனுமதி வழங்க வேண்டாமென்றும் இப்போதுள்ள கலவன் பாடசாலைகளை நீக்குவதற்கு நிதி நிலைமை சீரானதும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கல்வி அமைச்சர் வித்தியாதிபதிகளுக்கு அறிவித்திருக்கிறார்.

## விடுதீக்கிரை

பூநகரி, புதன் பூநகரி மட்டுவில் நாடுடைச் சேர்ந்த துரையப்பா இரத்தின சிங்கம் என்பவருடைய வீடு தீக்கிரையாகியது. மதுவெறியுடன் வந்த ஒருவர் வீட்டுக்கு தீவைத்ததாகவும் காணி உறுதி உட்பட ரூபா 1000 பெறுமதியான பொருட்கள் சாம்பலாகிவிட்டதாகவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## மகத்துவமிக்க மிஃராஜ்

யாழ்ப்பாணம், வியா, மாண்புமிக்க மிஃராஜ் இரவை யாழ்ப்பாணம் திருக்குர்ஆன் இயக்கத்தினர் இம்மாதம் 19-ம் திகதி கொண்டாடவிருப்பதாக யாழ்ப்பாணம் திருக்குர்ஆன் இயக்க பிரதம காரியதரிசி ஜனாப் எம். ஏ. எம். இப்ராஹிம் அறிவிக்கிறார். [ந. நி]

## இரியகொலே......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்க் கட்சியினர் பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்துள்ள கல்வி மந்திரிக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாளை (வியாழன்) விவாதம் ஆரம்பமாகவிருக்கிறது. இந்தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கும்படி பிரதம மந்திரி அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களை கேட்டுக் கொண்டார்.

# மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் பிட்டங்கித் தெரு நெல்லியடியாரி திரு. செல்லப்பா ஐயாத்துரை அவர்கள் (இராசையா) இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் மனோன்மணியின் அருமைக் கணவரும், திருமதி பராசக்தி சுந்தரலிங்கம் (மூன்லிங் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி), கனகேஸ்வரி (வேம்படி மகளிர் கல்லூரி), கணேசலிங்கம் (யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கி), யோகேஸ்வரி (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), சண்முகலிங்கம் (கிருண்ட் ஹோட்டல், யாழ்ப்பாணம்). பஞ்சலிங்கம், சிவபாலன் (மாணவர்கள், யாழ். மத்திய கல்லூரி), சிவசக்தி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் தந்தையும் வீ. சுந்தரலிங்கத்தின் (பாராளுமன்றம்) மாமனாரும் செ. இன்னத்துரை, செ. குமாரசாமி (நல்லூர்) ஆசிரியர், திருமதி நல்லம்மா முத்தையா ஆகியோரின் சகோதரரும் திருமதி சுவர்ணமாவின் மருமகனும், திருமதி பாக்கியம் துரையப்பா, வ. அரசரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (10-10-68) வியாழக்கிழமை மாலை 4-30க்கு கல்லூண்டி மயானத்தில் நடைபெறும்.

3, இரும்பிமடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

756

# கயிற்றில் தொங்கியவரை காப்பாற்றினர் பொலிசார்

யாழ்ப்பாணம், வியாழன் முதலில் மனைவியில் சந்தேகமாம். பின்னர் குடும்பத்தில் தகராறு. இவைகளிலிருந்து நிரந்தரவிடுதலைபெற கழுத்தில் சுருக்கிட்டாராம் நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர். இவருக்கு அங்கும் கூட விடுதலை தான் கிடைத்தது.

பொலிசாரால் தக்க சமயத்தில் கயிறு அறுத்து காப்பாற்றப்பட்ட இந்த தந்தைக்கு எதிராக, தற்கொலை செய்ய எத்தனித்ததென்ற குற்றச்சாட்டில் பொலிஸார் இன்று யாழ் வழக்கு தாக்கல் செய்தனர். இச்சம்பவம் நேற்றிரவு கரையூர் பொலிஸ்பகுதியில் நடைபெற்றது.

முள்ளைத்தீவில் வேலை புரியும் ஒருவரே நேற்றிரவு கரையூரிலுள்ள தன் வீட்டில் கழுத்தில் சுருக்கிட்டு தொங்கிக்கொண்டிருக்கையில் காப்பாற்றப்பட்டவராவார். இவர் தனதுமனைவியில் சந்தேகம் கொண்டதைத் தொடர்ந்தே தற்கொலை முயற்சியில் இறங்கியதாகப் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை செய்ய எத்தனித்தார் என்ற குற்றச்சாட்டின் இவருக்கு எதிராக கரையூர் பொலிசார் இன்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்கள். (கா. நி.)

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 6 இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org